www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

# முதல் வகுப்பு

## முதல் பருவம்

தொகுதி 1

# தமிழ்

# ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

1 STD Tamil & English CV1.indd 1 02-03-2018 13:15:03

www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு – *2018*

(பொதுப் பாடத்திட்டத்தின் கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in



1 STD Tamil & English CV1.indd 2 02-03-2018 13:15:03

# முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது!! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடை பயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அஃறிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.

அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.

தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, இப்புதிய பாடநூல்களின் துணைகொண்டு கீழ்க்கண்ட நோக்கங்களை அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.


- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றி படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.



TN_GOVT_Maths_Tamil_Ch01_01-10.indd 3 02-03-2018 16:11:17

www.tntextbooks.in



1 STD Tamil & English CV1.indd 4 02-03-2018 13:15:03

# நாட்டுப்பண்

*ஜன கண மன அதிநாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா*
*திராவிட உத்கல பங்கா*
*விந்திய ஹிமாசல யமுனா கங்கா*
*உச்சல ஜலதி தரங்கா.*
*தவ சுப நாமே ஜாகே*
*தவ சுப ஆசிஸ மாகே*
*காஹே தவ ஜய காதா*
*ஜன கண மங்கள தாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*ஜய ஹே ஜய ஹே ஜய ஹே*
*ஜய ஜய ஜய ஜய ஹே!*

\- *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு


வெற்றி! வெற்றி! வெற்றி!



# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



1 STD Tamil & English CV1.indd 6 02-03-2018 13:15:04

# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

www.tntextbooks.in




## மனமகிழ் பக்கங்கள்

வகுப்பறையை நேயமிக்க இடமாக அறிமுகப்படுத்தும் நோக்கோடு 1–8 வரையிலான பக்கங்கள் 'மனமகிழ்' பக்கங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் தங்கள் விருப்பம்போல் பாடி ஆடி விளையாடி, ஒருவரோடு ஒருவர் பழகிட இப்பக்கங்கள் ஏதுவாக இருக்கும்.


## முன்பழகு செயல்கள்

9–17 வரையிலான பக்கங்களில் உற்றுநோக்கல், கூர்ந்து கவனித்தல், விழி–விரல் ஒத்திசைவு, உருவங்களை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் பார்த்தல், நுண்தசைப் பயிற்சி போன்றவை படிக்க, எழுத 'முன்பழகு செயல்களாகக்' கொடுக்கப்பட்டுள்ளன.



## உயிரெழுத்துகள்

ஒரே நாளில் நடைபெறுகின்ற, ஆறு படக்காட்சிகளைக் கொண்ட தொடர்நிகழ்வுக் கதையாக உயிரெழுத்துகள் அறிமுகம் அமைக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடவும், கற்பனையைத் தூண்டவும் இப்பகுதி வாய்ப்பளிக்கும்.




பாடநூலில் உள்ள விரைவு குறியீட்டை (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?


- உங்கள் திறன்பேசியில்,கூகுள் playstore /ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தி திரையில் தோன்றும் கேமராவை QR Code–இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியை(URL) சொடுக்க, அதன் விளக்கப் பக்கத்திற்கு செல்லும்.

## மெய்யெழுத்துகள்

மெய்யெழுத்துகள் அறிமுகம் சிந்தனையைத் தூண்டும் புதிர்த்தன்மையுடன் அமைந்துள்ளது. கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபட இப்பகுதி வழிவகுக்கும்.






## வளர்ச்சிப் படிநிலைகள்

ஒலி வடிவம், வரி வடிவம், எழுத்துகளோடு ஒலியை ஒப்பிட்டுப் பார்த்தல், எழுத்துகளைத் தனியாகவும், சொற்களிலும் சொற்றொடரிலும் அடையாளம் காணல், ஒலித்துப் பழகுதல், எழுதிப் பழகுதல், மதிப்பீடு என்ற வளர்ச்சிப் படிநிலைகளின் அடிப்படையில் பாடப்பகுதிகள் அமைந்துள்ளன.








## எழுத்தோவியங்கள்

மனனம் செய்வதும் எழுதிப் பார்ப்பதுமே மதிப்பீடு என்ற நிலை மாறி, எழுத்தோவியங்களில் வண்ணம் தீட்டுதல், கோட்டோவியங்களை வரைதல் போன்ற 'குழந்தைகளின் விருப்பச் செயல்கள்' மதிப்பீட்டுச் செயல்களாக வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

www.tntextbooks.in


# தமிழ்

## முதல் வகுப்பு

### முதல் பருவம்

1 STD Tamil & English CV1.indd 10 02-03-2018 13:15:07

www.tntextbooks.in



# பொருளடக்கம்


| வ. எண் | பாடத் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | பாடி ஆடி விளையாடலாம் | 1 |
| 2. | விரலோடு விளையாடு | 8 |
| 3. | மகிழ்வோடு கற்போம் – 1 (உயிரெழுத்துகள்) | 17 |
| 4. | மகிழ்வோடு கற்போம் – 2 (மெய்யெழுத்துகள்) | 48 |
| 5. | என் நினைவில் | 67 |





5LCQDL
மின் நூல்

5LLLF9
மதிப்பீடு

இணைய வளங்கள்

Tamil Final PDF.indd 1 02-03-2018 10:59:03

www.tntextbooks.in




www.tntextbooks.in

# 1 பாடி ஆடி விளையாடலாம்

## காட்டுக்குள்ளே கொண்டாட்டம்


பிடித்த விளையாட்டுகள் குறித்துப் பேசி மகிழ்வோம்

5LVHGH



www.tntextbooks.in

# ஆலமரத்துல விளையாட்டு



ஆலமரத்துல விளையாட்டு
அணிலே அணிலே கைதட்டு

குக்கூ குக்கூ குயில்பாட்டு
கொஞ்சும் கிளியே தலையாட்டு

குட்டிக்குரங்கே வாலாட்டு
குள்ள நரியே தாலாட்டு

சின்ன முயலே மேளங்கொட்டு
சிங்கக்குட்டியே தாளந்தட்டு

எல்லாருந்தான் ஆடிக்கிட்டு
ஏலேலேலோ பாடிக்கிட்டு


ஒன்றாகத்தான் சேர்ந்துகிட்டு
ஓடிவாங்க துள்ளிக்கிட்டு

Tamil Final PDF.indd 4 02-03-2018 10:59:07

www.tntextbooks.in

# இலையும்... காயும்...

## படத்தைப் பார்த்துக் கதை கூறி மகிழ்வோம்





Tamil Final PDF.indd 5 02-03-2018 10:59:07

# விளையாடலாம் வாங்க



இடிக்காமல் நடப்போம்

இடுப்பில் கை வைத்தபடி ஒருவரோடு
ஒருவர் இடிக்காமல் நடப்போம்



உள்ளே! வெளியே!

வட்டத்தில் நின்று ஆசிரியர் கூறுவதற்கு ஏற்ப
வட்டத்தின் உள்ளே/ வெளியே குதிப்போம்



நடிப்போம் நடிப்போம்

விரும்பியபடி மாறி
நடித்துக்காட்டுவோம்

www.tntextbooks.in

## கை வீசம்மா கைவீசு!

கை வீசம்மா கைவீசு

பள்ளிக்குப் போகலாம் கைவீசு

பாடம் படிக்கலாம் கைவீசு

கணிப்பொறி கற்கலாம் கைவீசு

கவிஞர் ஆகலாம் கைவீசு

அறிவியலை அறியலாம் கைவீசு

அறிஞர் ஆகலாம் கைவீசு

அறிவை வளர்க்கலாம் கைவீசு

அன்பாய் வாழலாம் கைவீசு

விளையாடப் போகலாம் கைவீசு

வெற்றி பெறலாம் கைவீசு

கை வீசம்மா கைவீசு





Tamil Final PDF.indd 7 02-03-2018 10:59:23

# நானும் வருவேன்





வகுப்பறையின் அன்றாடச் செயல்பாடுகள் குறித்துக் கலந்துரையாடுவோம்

# 2 விரலோடு விளையாடு

## நாய்க்குட்டியைத் தேடி...




## வேறுபட்டதை வட்டமிடுவோம்




## ஒன்றுபோல் உள்ளதை இணை சேர்ப்போம்









## பொருத்தமானதைக் குழுவுடன் சேர்ப்போம்







## இணை சேர்ப்போம்; தனித்திருப்பதை வட்டமிடுவோம்



## நிகழ்வைச் சொல்வேன்





Tamil Final PDF.indd 11 02-03-2018 10:59:42

www.tntextbooks.in

## பெயரைச் சொல்வேன்
















Tamil Final PDF.indd 12 02-03-2018 10:59:47

www.tntextbooks.in

## விரலோடு விளையாடு

குச்சி விளையாட்டு




களிமண்ணில் கைவண்ணம்



## தானியங்களே ஓவியங்களாய்






## விருப்பம்போல் கிறுக்கலாம்






Tamil Final PDF.indd 13 02-03-2018 10:59:48

## வண்ணம் தீட்டுவேன்




## புள்ளிகளை இணைப்பேன்






Tamil Final PDF.indd 14 02-03-2018 10:59:50


# வாங்க என்னோடு



## விடுபட்டதை வரைவேன்



## விரலோவியம்





Tamil Final PDF.indd 16 02-03-2018 10:59:52

www.tntextbooks.in

## அதோ பாராய் !

குதித்துக் குதித்தே ஓடும்
குதிரை அதோ பாராய்

அசைந்து அசைந்து செல்லும்
ஆனை இதோ பாராய்


பறந்து பறந்து போகும்
பருந்து அதோ பாராய்

நகர்ந்து நகர்ந்து செல்லும்
நத்தை இதோ பாராய்

தத்தித் தத்திப் போகும்
தவளை அதோ பாராய்

துள்ளித் துள்ளி நாமும்
பள்ளி செல்வோம் வாராய்

– அழ. வள்ளியப்பா



5H5DIJ

Tamil Final PDF.indd 17 02-03-2018 10:59:52

www.tntextbooks.in

# 3 மகிழ்வோடு கற்போம் – 1

(உயிரெழுத்துகள்)

## அணிலும் ஆலமரமும்


கதை கேட்போம் பேசி மகிழ்வோம்





5ME9K7

www.tntextbooks.in

## 'அ'வில் தொடங்கும் பெயர்களைக் கூறுவோம்

## 'அ' அறிவோம்

அ


அரிசி



அம்மா


அப்பளம்


அணில்



அன்னம்


அலைபேசி


அல்லி

## சொல்லிப்பார்த்து இணைப்பேன்






அ









Tamil Final PDF.indd 19 02-03-2018 11:00:00

## 'அ' எழுத்தைக் கண்டுபிடிப்போம்

### வண்ணமிடுவேன்



### வட்டமிடுவேன்

அழகு   படம்   அருவி   மரம்   இலை

அன்பு   பாப்பா   இனிப்பு   அப்பளம்   அம்மா

### அடிக்கோடு இடுவேன்




#### அன்பான சிங்கம்

அது ஓர் அடர்ந்த காடு. அந்தக் காட்டில் சிங்கம் ஒன்று இருந்தது. அது மிகவும் அன்பானது. குகையிலிருந்து வெளியே வந்தது.


அப்போது மரத்தின் கீழே பசியோடு அமர்ந்திருந்த அணிலைக் கண்டது. சிங்கம் அணிலின் அருகில் சென்றது. அணில் பயந்து நடுங்கியது. சிங்கமோ அணிலுக்குப் பழம் ஒன்றைக் கொடுத்தது. அணில் அன்புடன் நன்றி கூறியது.

## 'ஆ'வில் தொடங்கும் பெயர்களைக் கூறுவோம்









## 'ஆ' அறிவோம்




## சொல்லிப்பார்த்து இணைப்பேன்







Tamil Final PDF.indd 21 02-03-2018 11:00:08

www.tntextbooks.in

# 'ஆ' எழுத்தைக் கண்டுபிடிப்போம்

வண்ணமிடுவேன்




வட்டமிடுவேன்

ஆடு  ஊஞ்சல்  ஆறு  ஆலமரம்  இலை

பந்து  ஆட்டம்  சக்கரம்  அரிசி  ஆந்தை

அடிக்கோடு இடுவேன்

## ஆலங்கட்டி மழை



ஆலந்தூரில் நேற்று மாலை மழை பெய்தது. தூறலாக தொடங்கிய மழை, நேரம் ஆக ஆக பெருமழையாக மாறியது.


ஆடிக்காற்றோடு சேர்ந்து பெய்த மழையில் ஆலங்கட்டிகள் விழுந்தன. அதனைக் குழந்தைகள் அனைவரும் ஆர்வத்துடன் பார்த்தனர்; ஆரவாரம் செய்தனர்.

www.tntextbooks.in


## எழுத்தோவியம்

வண்ணமிட்டு முழுமையாக்குவேன்






## எழுதும் முறை அறிவேன்



## மணலில் எழுதுவேன்



## எழுதிப் பழகுவேன்





Tamil Final PDF.indd 23 02-03-2018 11:00:12

# கோட்டோவியம்


எழுத்திற்குரிய படங்களை வரைவேன்

5HN5LU


அ



ஆ



# நிரப்புவேன்



____ மை



____ ப்பளம்



____ ணில்




____ லமரம்

www.tntextbooks.in

# இளநீரும் ஈச்சமரமும்

கதை கேட்போம் பேசி மகிழ்வோம்

5MX1NH



## 'இ, ஈ' யில் தொடங்கும் பெயர்களைக் கூறுவோம்





## விளையாடலாம் வாங்க



சொல்லில்

இ இருந்தால்
கை தட்டுவோம்

ஈ இருந்தால்
கை தூக்குவோம்

## 'இ' அறிவோம்

இ



இலை



இட்டலி



இஞ்சி



இலந்தை

## 'ஈ' அறிவோம்

ஈ



ஈ



ஈட்டி



ஈச்சமரம்




ஈசல்



Tamil Final PDF.indd 26 02-03-2018 11:00:25

## வண்ணமிடுவோம்





## இணைப்போம்




## எழுத்தோவியம்

வண்ணமிட்டு முழுமையாக்குவேன்




## எழுதும் முறை அறிவேன்



## நீரைத் தொட்டு எழுதுவேன்



## எழுதிப் பழகுவேன்






## கோட்டோவியம்

எழுத்திற்குரிய படங்களை வரைவேன்

இ

ஈ



5N6HQ5

## நிரப்புவேன்




____ ளநீர்



____ ச்சமரம்



____ றகு




____ சல்

www.tntextbooks.in

# உரலும் ஊஞ்சலும்

## கதை கேட்போம் பேசி மகிழ்வோம்



5NFSRS

## பாடலாம் வாங்க



உரலில் எள்ளை இடிக்கலாம்
உருண்டையாகப் பிடிக்கலாம்
உறவுக்கெல்லாம் கொடுக்கலாம்
உற்சாகமாய் உண்ணலாம்



ஊர்வலமாய்ப் போகலாம்
ஊதாப்பூ பார்க்கலாம்
ஊதல் ஊதி மகிழலாம்
ஊஞ்சலிலே ஆடலாம்

## விளையாடலாம் வாங்க



சொல்லில்

உ இருந்தால்
கை தட்டுவோம்

ஊ இருந்தால்
கை தூக்குவோம்

## 'உ' அறிவேன்



உப்பு



உண்டியல்



உருளைக்கிழங்கு

உ



உழவர்

## 'ஊ' அறிவேன்



ஊதல்




ஊஞ்சல்

ஊ



ஊறுகாய்




ஊசி




Tamil Final PDF.indd 31 02-03-2018 11:00:43

## வண்ணமிடுவோம்





## இணைப்போம்




## எழுத்தோவியம்

வண்ணமிட்டு முழுமையாக்குவேன்




### எழுதும் முறை அறிவேன்




### முதுகில் எழுதுவேன்



### எழுதிப் பழகுவேன்



www.tntextbooks.in


## கோட்டோவியம்



எழுத்திற்குரிய படங்களை வரைவேன்

5NPNTF

உ

ஊ

## நிரப்புவேன்




____தல்



____ஞ்சல்



____ண்டியல்



____ருளைக்கிழங்கு




Tamil Final PDF.indd 34 02-03-2018 11:00:51

www.tntextbooks.in

# எறும்பும் ஏணியும்

கதை கேட்போம் பேசி மகிழ்வோம்


5NYJV3



## பாடலாம் வாங்க



எலி ஒன்று வந்ததாம்
எருமை மீது நின்றதாம்
எறும்பை அங்கே கண்டதாம்
எள்ளுருண்டை தந்ததாம்!



ஏணி மேலே ஏறலாம்
ஏறி ஏறி இறங்கலாம்
ஏழு பழங்கள் பறிக்கலாம்
ஏழு வண்ணம் பார்க்கலாம்!

## விளையாடலாம் வாங்க



சொல்லில்

எ இருந்தால்
கை தட்டுவோம்

ஏ இருந்தால்
கை தூக்குவோம்

## 'எ' அறிவோம்

எ



எறும்பு



எலும்பு



எலி



எலுமிச்சை



எள்ளுருண்டை

## 'ஏ' அறிவோம்

ஏ




ஏணி



ஏலக்காய்



ஏழு




ஏர்



Tamil Final PDF.indd 36 02-03-2018 11:00:55

www.tntextbooks.in

## வண்ணமிடுவோம்





## இணைப்போம்







Tamil Final PDF.indd 37
02-03-2018 11:00:59


## எழுத்தோவியம்



## எழுதும் முறை அறிவேன்




## கையில் எழுதிப்பார்ப்பேன்



## எழுதிப் பழகுவேன்

எ எ எ எ எ எ எ


ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ

## கோட்டோவியம்


எழுத்திற்குரிய படங்களை வரைவேன்

எ

ஏ



## நிரப்புவேன்




____ணி



____லி



____லக்காய்



____ றும்பு



Tamil Final PDF.indd 39 02-03-2018 11:01:02

www.tntextbooks.in



# ஐ! ஒட்டகச்சிவிங்கியும் ஓணானும்

கதை கேட்போம் பேசி மகிழ்வோம்

## 'ஐ' அறிவோம்







ஐவர் ஐ ஐந்து

## பாடலாம் வாங்க

ஓடும் வண்டி ஒன்றிலே
ஒட்டகம், ஓநாய் அருகிலே
ஓணான் தம்பி கூடவே
ஒட்டகச்சிவிங்கி போகுதே



## 'ஒ' அறிவோம்




ஒட்டகம்




ஒலிபெருக்கி

ஒ




ஒன்று



ஒலிப்பான்

## 'ஓ' அறிவோம்



ஓணான்



ஓடம்

ஓ



ஓநாய்




ஓலை



Tamil Final PDF.indd 41 02-03-2018 11:01:06

## வண்ணமிடுவோம்





## இணைப்போம்







www.tntextbooks.in

## எழுத்தோவியம்




## எழுதும் முறை அறிவேன்



## காற்றில் எழுதிப்பார்ப்பேன்



## எழுதிப் பழகுவேன்






Tamil Final PDF.indd 43 02-03-2018 11:01:13

## கோட்டோவியம்


எழுத்திற்குரிய படங்களை வரைவேன்

5PR811

| | |
|---|---|
| ஐ | |
| ஒ | |
| ஓ | |



## நிரப்புவேன்






Tamil Final PDF.indd 44 02-03-2018 11:01:14

www.tntextbooks.in



# ஔவை பாட்டி

கதை கேட்போம் பேசி மகிழ்வோம்

## 'ஔ' அறிவோம்



ஔவை




ஔடதம்

## எழுத்தோவியம்




## எழுதும் முறை அறிவேன்




## மணலில் எழுதுவேன்



## எழுதிப் பழகுவேன்

ஔ ஔ ஔ ஔ ஔ

## நிரப்புவேன்

| | | | |
|---|---|---|---|
| | ட | த | ம் |





| | |
|---|---|
| | வை |




Tamil Final PDF.indd 46 02-03-2018 11:01:18

www.tntextbooks.in

## வரிசைமுறை அறிவேன்

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

## சொல்லிக்கொண்டே இணைப்பேன்








### அறிவோம்



எஃகு வாள்



### ஆய்த எழுத்தை வட்டமிடுவேன்



அஃது ஓர் எஃகு வாள்



Tamil Final PDF.indd 47 02-03-2018 11:01:20

# 'அ' முதல் 'ஔ' வரை

அ

ஆ


அண்ணன்
கையில்
அலைபேசி





ஈர
மண்ணில்
ஈசல்

ஆற்றில்
நீந்தும்
ஆமை





உருண்டு
செல்லும்
உருளை

இரவில்
வந்த
இடிமின்னல்





ஊதா
நிற
ஊதல்

எ


ஏ

ஐ

www.tntextbooks.in

இ ஈ உ ஊ

எல்லாம்
செய்யும்
எந்திரமனிதன்





ஒளிந்து
நின்ற
ஒட்டகம்

ஏற்றம்
தந்த
ஏவுகணை





ஓரம்
நிற்கும்
ஓடம்

ஐயம்
கேட்ட
ஐவர்





ஔவை
தந்த
ஔடதம்

ஒ ஓ ஔ



Tamil Final PDF.indd 49 02-03-2018 11:01:26

www.tntextbooks.in

அ
ஆ
இ
ஈ
உ
ஊ
எ
ஏ
ஐ
ஒ
ஓ
ஔ

## அம்மா இங்கே வா வா

5Q9Z4B

அம்மா இங்கே வா வா
ஆசை முத்தம் தா தா
இலையில் சோறு போட்டு
ஈயைத் தூர ஓட்டு
உன்னைப் போன்ற நல்லார்
ஊரில் யாவர் உள்ளார்?
என்னால் உனக்குத் தொல்லை
ஏதும் இங்கே இல்லை
ஐயமின்றிச் சொல்வேன்
ஒற்றுமை என்றும் பலமாம்
ஓதும் செயலே நலமாம்
ஔவை சொன்ன மொழியாம்
அஃதே எனக்கு வழியாம்



ஃ

www.tntextbooks.in

# 4 மகிழ்வோடு கற்போம் – 2

(மெய்யெழுத்துகள்)

## ஆறு வேறுபாடுகளைக் கண்டுபிடிப்போம்









Tamil Final PDF.indd 51 02-03-2018 11:01:28


## எழுத்துகளை அறிவேன்


கொக்கு
தக்காளி
முறுக்கு
முக்காலி
க்
ச்
எலுமிச்சை
அச்சாணி
பச்சை
குச்சி
ட்
த்
தட்டு
பூட்டு
சட்டை
முட்டை
வாத்து
மத்து
சுத்தி
நத்தை
தொப்பி
பப்பாளி
உப்பு
சீப்பு
ப்
ற்
வெற்றிலை
நாற்று
கற்றாழை
காற்றாலை

## உரிய படத்தை இணைப்போம்


















பெட்டி உப்பு முறுக்கு வெற்றிலை எலுமிச்சை மத்து




www.tntextbooks.in

## எழுதும் முறை அறிவேன்




5YILZ4

## எழுத்தோவியம்



## எழுதிப் பழகுவேன்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க் | க் | க் | க் | க் | க் | க் |
| ச் | ச் | ச் | ச் | ச் | ச் | ச் |
| ட் | ட் | ட் | ட் | ட் | ட் | ட் |
| த் | த் | த் | த் | த் | த் | த் |
| ப் | ப் | ப் | ப் | ப் | ப் | ப் |
| ற் | ற் | ற் | ற் | ற் | ற் | ற் |



Tamil Final PDF.indd 54 02-03-2018 11:02:01

## கோட்டோவியம்

ட்　　க்　　த்



ப்　　ற்　　ச்

## நிரப்புவேன்



| | | |
|---|---|---|
| கொ | | கு |



| | | |
|---|---|---|
| வா | | து |




| | | | |
|---|---|---|---|
| க | | றா | ழை |



| | | |
|---|---|---|
| பூ | | டு |



| | | | |
|---|---|---|---|
| அ | | சா | ணி |



| | | |
|---|---|---|
| சீ | | பு |



Tamil Final PDF.indd 55　　02-03-2018 11:02:09


# இல்லை. ஆனால் இருக்கிறது!

5YSI1R



www.tntextbooks.in


## எழுத்துகளை அறிவேன்






Tamil Final PDF.indd 57 02-03-2018 11:02:30

## உரிய படத்தை இணைப்போம்























கண் மூங்கில் ஊஞ்சல் மீன் மரம் சாமந்தி



## எழுதும் முறை அறிவேன்

5Z2E3E




## எழுத்தோவியம்



## எழுதிப் பழகுவேன்


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ங் | ங் | ங் | ங் | ங் | ங் | ங் |
| ஞ் | ஞ் | ஞ் | ஞ் | ஞ் | ஞ் | ஞ் |
| ண் | ண் | ண் | ண் | ண் | ண் | ண் |
| ந் | ந் | ந் | ந் | ந் | ந் | ந் |
| ம் | ம் | ம் | ம் | ம் | ம் | ம் |
| ன் | ன் | ன் | ன் | ன் | ன் | ன் |



Tamil Final PDF.indd 59 02-03-2018 11:03:07

## கோட்டோவியம்

ங் ம் ண்



ந் ஞ் ன்

## நிரப்புவேன்



| | | |
|---|---|---|
| ச | | கு |



| | | |
|---|---|---|
| ம | ர | |



| | |
|---|---|
| க | |



| | | | |
|---|---|---|---|
| மு | | தி | ரி |



| | | | |
|---|---|---|---|
| ம | | ச | ள் |



| | | |
|---|---|---|
| கா | ளா | |



Tamil Final PDF.indd 60 02-03-2018 11:03:11

# மறைந்துள்ளதைக் கண்டுபிடி





Tamil Final PDF.indd 61 02-03-2018 11:03:12

# எழுத்துகளை அறிவேன்



நாய்



பாய்



மிளகாய்



இளநீர்



ஏர்



வேர்

ய் ர்

ல் வ்




முயல்



மயில்



அணில்



செவ்வானம்



செவ்வந்தி



சவ்வரிசி



தாழ்ப்பாள்



யாழ்



கேழ்வரகு



முள்




தேள்



வாள்

ழ் ள்

## உரிய படத்தை இணைப்போம்



























Tamil Final PDF.indd 63 02-03-2018 11:03:30

## எழுதும் முறை அறிவேன்

5ZK66P




## எழுத்தோவியம்




## எழுதிப் பழகுவேன்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ய் | ய் | ய் | ய் | ய் | ய் | ய் | ய் |
| ர் | ர் | ர் | ர் | ர் | ர் | ர் | ர் |
| ல் | ல் | ல் | ல் | ல் | ல் | ல் | ல் |
| வ் | வ் | வ் | வ் | வ் | வ் | வ் | வ் |
| ழ் | ழ் | ழ் | ழ் | ழ் | ழ் | ழ் | ழ் |
| ள் | ள் | ள் | ள் | ள் | ள் | ள் | ள் |

## கோட்டோவியம்

ய் ள் ல்



வ் ழ் ர்

## நிரப்புவேன்



| | | | |
|---|---|---|---|
| மி | ள | கா | |



| | |
|---|---|
| மு | |



| | | |
|---|---|---|
| மு | ய | |



| | |
|---|---|
| யா | |



| | | | | |
|---|---|---|---|---|
| செ | | வா | ன | ம் |



| | |
|---|---|
| வே | |



Tamil Final PDF.indd 65 02-03-2018 11:03:40

க் ங் ச் ஞ் ட்

## 'க்' முதல் 'ன்' வரை

பக்கம்
நிற்கும்
கொக்கு



எங்கள்
வீட்டில்
பொங்கல்



பச்சை
நிற
மொச்சை



பஞ்சு
மெத்தையில்
துஞ்சு





கட்டம்
போட்ட
சட்டை



வண்டிக்
குதிரை
சண்டி



முத்து
கைவிரல்
பத்து



பந்து
போட
முந்து



அப்பா
தந்த
சொப்பு

ய் ர் ல் வ்

ண்   த்   ந்   ப்   ம்


தம்பி
பார்த்த
தும்பி



நெய்
சோறு
செய்



தேர்
வருது
பார்



நல்ல
வழியில்
செல்



செவ்வகத்
தட்டில்
கொவ்வை





யாழ்
கேட்டு
மகிழ்



துள்ளி
ஓடும்
புள்ளிமான்



காற்றில்
ஆடும்
கீற்று



என்னை
ஈன்ற
அன்னை

ழ்   ள்   ற்   ன்



Tamil Final PDF.indd 67 02-03-2018 11:03:59

# 5 என் நினைவில்




உருவத்தைக் கண்டுபிடி!
எழுத்தை எழுது



www.tntextbooks.in

எறும்பின் வழியில் வரிசையாய் எழுது



# முதல் வகுப்பு – தமிழ்
## ஆக்கம்

### ஆலோசனைக்குழு
முனைவர் பா.வீரப்பன்
பேராசிரியர், தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், புது டில்லி.

முனைவர் டி.சகாயதாஸ்
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், கேரளா.

### மேலாய்வாளர்குழு
முனைவர் ச.மாடசாமி
பேராசிரியர், (ஓய்வு) சென்னை.

திருமதி பத்மாவதி
எழுத்தாளர் சென்னை.

### பாட வல்லுநர்குழு
செல்வி தி.குறள்மதி
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், தருமபுரி மாவட்டம்.

திருமதி எஸ்தர் ராணி
முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் முனைஞ்சிப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

## கலை மற்றும் வடிவமைப்புக்குழு

### தலைமை ஒருங்கிணைப்பாளர் வடிவமைப்பு– ஆக்கம்
சீனிவாசன் நடராஜன்

### வரைபடம்
திரு. கலைச்செல்வன்
திரு. செ.ரமேஷ்குமார்
திரு. ச.கௌதம்
திரு. ஜான் ராஜா
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, வெங்கடேசபுரம், கடலூர் மாவட்டம்.
திரு. சோ.வேல்முருகன்
ஓவிய ஆசிரியர், அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளி, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.
திரு. பி.செல்வகுமார்
இடைநிலை ஆசிரியர், அரசு ஆதி திராவிட நல தொடக்கப்பள்ளி, அம்மாசியபுரம், தேனி மாவட்டம்.
திரு. ஏ.முத்துக்குமரன்
ஓவிய ஆசிரியர், அ.மே.நி.பள்ளி, பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.
திரு. முகிலன்
திரு. கா.தனஸ் தீபக் ராஜன்
திரு. கா.நலன் நான்சி ராஜன்
திரு. ம.சார்லஸ்

ஓவிய ஆசிரியர்கள், தமிழ்நாடு அரசு.

மாணவர்கள்
அரசு கவின் கலை கல்லூரி, சென்னை மற்றும் கும்பகோணம்.

### பக்க வடிவமைப்பு
வி 2 இன்னோவேசன்ஸ், கோபாலபுரம்.

### In-House - QC
திரு. கோபு ராசுவேல், சென்னை.
திரு. மு.அஸ்கர் அலி, சென்னை.
திரு. ஜெ.பாலாஜி, சென்னை.

### பாடநூல் உருவாக்கக் குழு
திருமதி க.உமாதேவி
தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கரவழி, மாதப்பூர், கோவை மாவட்டம்.

திருமதி வே.சுடரொளி
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கரிக்கலவாக்கம், திருவள்ளூர் மாவட்டம்.

திரு. க.முருகன்
ஆசிரியர் பயிற்றுநர், பெத்தநாயன் பாளையம், சேலம் மாவட்டம்.

செல்வி பா.ப்ரீத்தி
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சீர்ப்பனந்தல், இரிஷிவந்தியம் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

திருமதி பா.கற்பகம்
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, ஐயப்பன் நகர், வில்லிவாக்கம், திருவள்ளூர் மாவட்டம்.

திரு. பா.ச.குப்பன்
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கொட்டவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்.

திருமதி ஸ்ரீ.பார்வதி
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கந்தம்பட்டி, சேலம் மாவட்டம்

திருமதி பி.மாங்கனி
ஆசிரியர் பயிற்றுநர், நாமகிரிப்பேட்டை, நாமக்கல் மாவட்டம்.

திருமதி தெய்வ.சுமதி
தலைமைஆசிரியர், ஆதிதிராவிடர் நல பள்ளி, ஆத்தியூர், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

திருமதி த. உமா
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பரங்கிமலை, காஞ்சிபுரம் மாவட்டம்.

திருமதி ச.பஞ்சவர்ணம்
தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, தாம்பரம், சானிடோரியம், சென்னை.

திரு. கே.வி.மகேந்திரன்
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பெரியக்காகொண்டி, வேலூர் மாவட்டம்.

திருமதி இரா.தேன் மொழி
தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, அனகாவூர் காலனி, திருவண்ணாமலை மாவட்டம்.

திரு. ஜெ.லியோன்
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சின்னபாளையம், பாம்பன், இராமநாதபுரம் மாவட்டம்.

திரு. நா.சக்திவேல்
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, போகம்பட்டி, சுல்தான் பேட்டை ஒன்றியம், கோவை மாவட்டம்.

திருமதி ப.விசாலாட்சி
இடைநிலை ஆசிரியர், முனிசிப்பல் நடுநிலைப் பள்ளி, காதர்பேட், திருப்பூர் மாவட்டம்.

திரு. பு.விசாகன்
இடைநிலை ஆசிரியர், அரசு தொடக்கப் பள்ளி, புதுச்சேரி.

திரு. எஸ்.சரவணன்
இடைநிலை ஆசிரியர், முனிசிபல் நிடுநிலைப்பள்ளி, திருப்பூர் மாவட்டம்.

திருமதி தி.வித்யா
இடைநிலை ஆசிரியர் டிவிஎஸ், மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, பழங்காநத்தம், மதுரை மாவட்டம்.

திருமதி சு.சகிதா
இடைநிலை ஆசிரியர், ஸ்ரீ ஜெயேந்திரர் சுவாமிகள் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, மகாராஜா நகர், திருநெல்வேலி மாவட்டம்.

### வல்லுநர் & ஒருங்கிணைப்பாளர்
முனைவர் வெ.உஷாராணி
துணை இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

திருமதி இரா.பொன்மணி
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.



Tamil Final PDF.indd 70 02-03-2018 11:04:01